**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**
**Date of Publication : 5th & 6th of Every month**

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 12-14 |
| --- | --- |

வேணு : 17 | ஜனவரி 2012 | கானம் : 6

ஸ்ரீஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன்

**GOD Global Organisation for Divinity India Trust** - வழங்கும்

# "Traditional Treasures"
# "பாரம்பரிய பொக்கிஷங்கள்"



> When it comes to technology, the latest is the most valuable!
> When it comes to traditions, the eldest is the most valuable!
> - Maharanyam Sri Sri Muralidhara Swamiji

நாள் : **13.01.2012 - 22.01.2012** நேரம் : மாலை **6.30-8.30**
இடம் : நாரத கான சபா, சென்னை.

| | |
| --- | --- |
| 13/1/12 | தெய்வீக முத்திரைகள் - பரதநாட்டியம் - [illegible] ஸ்ரீ R. விஜய் மாதவன் |
| 14/1/12 | பண்டைய பாரதத்தின் மருத்துவ மேன்மை - [illegible] டாக்டர் [illegible] |
| 15/1/12 | துரோணாச்சாரியார் - நாடகம் - VNS மனோகர் தியேட்டர் குழு |
| 16/1/12 | சித்தர்களும் கிருஷ்ண பக்தியும் - ப்ரும்மஸ்ரீ டாக்டர் R.மணி திராவிட் சாஸ்திரிகள் |
| 17/1/12 | [illegible] கல்வெட்டுக்கள் - குடவாயில் டாக்டர் M. பாலசுப்ரமணியன் |
| 18/1/12 | பண்டைய கால பாரதத்தில் விஞ்ஞானம் - ப்ரும்மஸ்ரீ டாக்டர் K.ராமசுப்ரமணியன் |
| 19/1/12 | முற்பிறவி பற்றி வளர்ந்து வரும் மேற்கத்திய பார்வை - ஸ்ரீமதி காயத்ரி சிவராமகிருஷ்ணன் |
| 20/1/12 | ஜோதிடம் - ஜோதிடமேதை பி.வி.ராமனின் புதல்வி ஸ்ரீமதி காயத்ரி தேவி வாசுதேவ் |
| 21/1/12 | துவாரகையும் ஸரஸ்வதி நதியும் - ஸ்ரீ டி.கே.ஹரி |
| 22/1/12 | மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனைகள் |

**அனைவரும் வருக! அனுமதி இலவசம்!**

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**


ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 17 | ஜனவரி 2012 | கானம் : 6

Delivered by India Post www.indiapost.gov.in



பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் ஹனுமத் ஜெயந்தி - டிசம்பர் 8



மதுரபுரி ஆஸ்ரமம் - அத்யயன உத்ஸவம் - டிசம்பர் 17-28



மதுரபுரி ஆஸ்ரமம் - கன்யாகுமரி ஜய ஹனுமான் - ஹனுமத் ஜெயந்தி - டிசம்பர்24



டிசம்பர் 9-19 - மஸ்கட், சத்சங்கங்கள் -
Teachers Training Program - Transformation@Work நிகழ்ச்சி by Ramanujamji

மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசப்பெருமாள் திருக்கோவில் "வனபோஜனம்" - நவம்பர் 27







யோகிராம்சுரத்குமார் குருக்ஷேத்ரம் பூமி பூஜை - மதுரை - நவம்பர் 23, 2011

மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை - நவம்பர் 25- மதுரை, வி.எஸ்.செல்லம் மண்டபம்





தூத்துக்குடி நாமத்வார் – நவம்பர் 25




ஸ்ரீரங்கம் – நவம்பர் 30 – ரங்கபவனம் கல்யாண மண்டபம்



ஐக்கிய அரபு நாடுகளில்
சத்சங்கங்கள்
ராமானுஜம்ஜி –
நவம்பர் 30 – டிசம்பர் 9
















"மதுரஸ்மரணம்" – My Guru as I See HIM by பாக்யநாதன்ஜி
சிட்னி நாமத்வார் ஆஸ்திரேலியா டிசம்பர் 23

G.O.D Australia Retreat at Yerrinbool - GOD Australia team with Bhakyanathanji Dec 24 - 26








சென்னை பாரதிதாசன்காலனி புவனேஸ்வரி அம்மன் கோவில் – நவம்பர் 23




தெய்வத்தமிழ் இசை விழா துவக்கம் – டிசம்பர் 16, 2011 – மஹோதயா ஹால், அசோக்நகர்
(இட–வல) – திருமதி N.சாரதா, திரு R.B.V.S.மணியன், திரு D.தீனதயாளன்


நியூசிலாந்தில் மஹாமந்திர சத்சங்க துவக்கம் - நவம்பர் 26


நவம்பர் 19- பப்புவா நியூ கினியா - மஹாமந்திர சத்சங்க துவக்கம்

## ஆஸ்திரேலிய, நியூசிலாந்து, PNG, ஆக்லாந்து சத்சங்கங்களில் - பாக்யநாதன்ஜி


நியூசிலாந்து வெலிங்டன் பல்கலைக்கழகம் - நவம்பர் 28
Timeless wisdom of our scriptures Lecture



ஆக்லாந்து பஜனை சத்சங்கம் - டிசம்பர் 3

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:17 ஜனவரி 2012 கானம்:6

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 190 | 03 | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 |
| சிறப்பு ப்ரார்த்தனை | 07 | பாகவத பழம் -22 | 10 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 15 | சனாதன புதிர் | 25 |
| சத்சங்கங்க செய்திகள் | 28 | ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| மாலே மணிவண்ணா | 36 | அப்பாலுக்கு அப்பால் | 38 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி!
காரொளிவண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர்? களைகண் அம்மா! அரங்கமா நகருளானே!

தொண்டரடி பொடி ஆழ்வார் – திருமாலை – 29

2012 ஆங்கில புத்தாண்டில் வாசகர்கள் அனைவருக்கும் மேலும் சத்சங்கங்கள் கிடைக்கவும், மஹாமந்திர கீர்த்தனம் செய்யும் பாக்கியம் கிடைக்கவும், எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், குருவருளும் திருவருளும் அனந்தமாக கிடைக்கவும் “மதுரமுரளி” பிரார்த்தனை செய்கிறது.

## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஸிம்மேந்திர மத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

உலகம் அறியாதது கோபி ப்ரேமை
உத்தவனும் விக்கித்து நின்றனனே
(உலகம் ..)

அனுபல்லவி

ஆசார அனுஷ்டானம், தீர்த்தம், க்ஷேத்திரம்
பூஜை தியானம் கடந்தது
(உலகம் ..)

சரணம்

வாக்கினால் அதை வர்ணிக்க முடியாது
அறிவினால் அதை அளக்கவும் முடியாது
மனதிற்கோ அது புரியவே புரியாது
ராதை அருளிருந்தால் அது ஸாதாரணமே
(உலகம் ..)

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் ஒலித்தட்டுக்களாக எட்டு வால்யூம்கள் வந்துள்ளன. இவை மேற்கு மாம்பலத்திலுள்ள "மதுரம்" புத்தக ஸ்டாலில் கிடைக்கும்.

தொடர்பு கொள்ள: +91 44 2372 7400

# மதுரமான மஹனீயர் – 190

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

ஒரே பரமாத்மாவை அடைவதற்கு பலவிதமான வழிகள் உண்டு என்றபோதிலும் அதில் எளிமையானது பிரார்த்தனை. பிரார்த்தனை என்பது, கீர்த்தனத்தை அடிப்படையாக கொண்டது. கீர்த்தனத்திலும் மஹாமந்திர கீர்த்தனமே, இந்த யுகத்திற்கு பொருத்தமானது.

இந்த மஹாமந்திர கீர்த்தனத்தை அடிப்படையாக கொண்டு உலகம் முழுவதிலும் பல பிரார்த்தனை மையங்கள் அமைய வேண்டும் என்பதற்காக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு, ஆங்காங்கே பல பிரார்த்தனை மையங்களை அமைத்து வருகின்றார்கள்.

அப்படி அமையும் பிரார்த்தனை மையங்களுக்கு எல்லாம் “நாமத்வார்” என்று பெயர். சென்ற ஆண்டு தூத்துக்குடியில் திரு.கதிரேசன் அவர்கள் சொந்தமாக இடம் வாங்கி நாமத்வார் அமைத்துள்ளார். அதில் அழகான மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரத மூர்த்தி எழுந்தருளி உள்ளார்கள். இந்த விஷயங்களை ஏற்கனவே மதுரமுரளியில் எழுதியுள்ளோம்.

சென்ற மாதத்தில் ஸ்ரீஸ்வாமிஜி தூத்துக்குடி சென்றிருந்தார்கள். இப்பொழுது, நாமத்வார் முழுமை பெற்று பொலிவுடன் அழகாக காட்சி அளிக்கின்றது. தினமும் நூற்றுக்கணக்கில் பக்தர்கள் வந்து, நாமகீர்த்தனம் செய்து பகவானுடைய அருளுக்கு பாத்திரமாகி செல்கின்றார்கள். ஏகாதசி மற்றும் விசேஷ தினங்களில், ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகின்றனர். தினமும் பக்தர்கள் தொடர்ந்து, நூற்றுக்கணக்கில் வந்து, தொடர்ந்து ஆசையுடன் நாமகீர்த்தனம் செய்து வருவதால் பகவானின் சான்னித்யம் அங்கு நூறு சதவிகிதம் நிரம்பி வழிகின்றது. பகவானுடைய ஸான்னித்யம் பரிபூரணமாக இருப்பதால், இந்த நாமத்வாருக்குள் வருபவர்கள் எதை எதை விரும்பி பிரார்த்தனை செய்கின்றார்களோ, அதை அதை சுலபத்தில் அடைகின்றனர். அதோடு மட்டுமல்லாமல்,

தூத்துக்குடியில் பல பக்தர்கள் வீடு வீடாக சென்று, மக்களை நாமகீர்த்தனத்தில் ஈடுபடுத்தி அவர்களை பக்தர்களாக ஆக்கும் தவத்தை செய்து வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் மார்கழி மாதம் காலையில் நகரகீர்த்தனம் நடைபெறுவது வழக்கம். ஆனால் இப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முயற்சியால், பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊர்களிலும் காலையில் மஹாமந்திர கீர்த்தனம் மட்டும் செய்து கொண்டு படித்தவர்கள், படிக்காதவர்கள், ஆண்கள், பெண்கள், பெரிய பதவியில் உள்ளவர்கள் எல்லோரும் வீதிபஜனை செய்து வருகின்றார்கள். அதிலும் பெரிய நகரங்களில் பல பேட்டைகளில், தனித்தனியாக நாமகீர்த்தனம் நடந்து வருகின்றது. அதிலும் பெரிய நகரங்களில் பல பேட்டைகளில், தனித்தனியாக கீர்த்தனம் நடந்து வருகின்றது. வெளிநாட்டிலும் வீதி பஜனை நடக்கின்றது.

தமிழ்நாட்டில் பல நாமத்வார்களில், ஸர்வ சாதாரணமாக தினமுமே அகண்டமாக நாமகீர்த்தனம் நடந்து வருகின்றது. பகவானின் அருளால் மேலும் மஹாமந்திர கீர்த்தனம் பலதரப்பட்ட மக்களையும் சென்றடைந்து, எல்லோருக்கும் எல்லா நன்மைகளையும் அருள பிரார்த்தனை செய்வோமாக!

ஆசார்ய ஸ்தானத்தில் இருப்பவர்களுக்குத்தான் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், சிவாத்வைதம் போன்ற தத்துவ விசாரம் தேவை. ஒரு ஸத் ஸம்பிரதாயத்தில் இருக்கும் ஆசார்யனை ஆஸ்ரயித்தவர்களுக்கு அவர் சொல்வதை கடைப்பிடித்து வருவதே போதுமானது.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி : ஸ்ரீமத்பாகவதத்தில் அந்திம காலத்தில் "நாராயண" என்று ஸ்மரிக்க வேண்டும் என்று கூறியுள்ளதே! அப்படி என்ன "நாராயண" நாமத்திற்கு பெருமை?

பதில் : ஞான மார்க்கத்தை பின்பற்றுபவர்கள், அந்திம காலத்தில் பிரணவ ஜபம் செய்வார்கள். சன்யாசிகள் கடைசி காலத்தில், மாண்டூக்ய உபநிஷத்தை பாராயணம் செய்வார்கள். மாண்டூக்ய உபநிஷத் முழுவதும், பிரணவத்தின் பெருமையைத்தான் சொல்கின்றது. 'நாராயண' நாமத்தை பற்றி சொல்லும்பொழுது, ஒருமுறை 'நாராயணா' என்று சொன்னால் அது லட்சம் முறை பிரணவ ஜபம் செய்ததற்கு சமம் ஆனது என்று கூறியுள்ளதால், அந்திம காலத்தில் 'நாராயணா' என்று சொல்வது விசேஷம் என்று கூறப்பட்டுள்ளது.

கேள்வி : நாமகீர்த்தனம் செய்பவர்களில் சிலருக்கு உடன் பலன் கிடைக்கின்றது; சிலருக்கு தாமதித்து கிடைக்கின்றது. எதனால் இப்படி நடக்கின்றது?

பதில் : நாமகீர்த்தனம் என்று இல்லை; உலகில் எதற்கும், சமமான பலன் கிடைப்பதில்லை. ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரே ஆசிரியர்தான், நூறு மாணவர்களை உட்கார வைத்துக் கொண்டு, எல்லோருக்கும் பொதுவாக பாடம் சொல்லிக்கொடுக்கின்றார். சொல்லி கொடுப்பவரும், சொல்லி கொடுக்கும் விதமும், ஒரே மாதிரியாக இருந்தாலும், அதை நூறு மாணவர்களும் கிரஹித்து கொள்வதில் வித்தியாசம் உள்ளது. ஒருவன் முதல் மதிப்பெண் வாங்குகின்றான். சிலர் FAIL ஆகி விடுகின்றார்கள். சிலர் AVERAGE, சிலர் ABOVE AVERAGE என்று மதிப்பெண் வாங்குகின்றார்கள். ஒரே பெற்றோர்களுக்கு பிறக்கும் பல குழந்தைகளும், எந்த விதத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒரு குரு உபதேசம் செய்தாலும் அதை பல சீடர்கள் கேட்டாலும், சிலரே

அதை நடைமுறைப்படுத்தி, பயனை அடைகின்றனர். பொதுவாக சொல்லப்போனால், எல்லாவற்றிலுமே, எல்லோருக்கும் ஒரே மாதிரியான பலன் கிடைப்பதில்லை. நாமகீர்த்தனமும் அப்படித்தான். சிலருக்கு உடனே பலன் கிடைக்கலாம். சிலருக்கு தாமதமாக பலன் கிடைக்கலாம். ஆனால், பலன் கிடைக்காமல் மட்டும் போகவே போகாது. நாம் நம்பிக்கையை இழந்து தளர்ந்து விடவே கூடாது.

கேள்வி : ஒருவரை நாம் பக்தர் என்று எப்படி தெரிந்து கொள்வது?

பதில் : இறைவனுடைய கருணையை ஸதா நினைத்து கொண்டிருக்கும் அவர்கள், எப்பொழுதும் அழுது கொண்டு இருப்பார்கள். அவர்களிடம் மேனி சிலிர்ப்பு, குரல் தழுதழுத்தல், ஒரு நடுக்கம், அடிக்கடி மூர்ச்சையாதல் போன்ற அடையாளங்கள் காணப்படும் என்று பக்தி சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால், நாம் பக்தர்கள் என்று நினைக்கும் பலர், பக்தர்களாக இருப்பதில்லை. சிலரையோ, பக்தர்கள் என்று நினைப்பதற்கு, அவர்களிடம் எந்த ஒரு அடையாளமும் இருக்காது. ஆனால், அவர்கள் பக்தர்களாக இருப்பார்கள். ஒருவரிடம் பக்தி உள்ளதா இல்லையா என்பதை இறைவன்தான் முடிவு செய்ய முடியும். வெளியில் காணும் பல விஷயங்கள், நம்முடைய அறிவை மழுங்க செய்து நம்மை ஏமாற்றி விடும்.

கேள்வி : எவ்வளவு நாமகீர்த்தனம் செய்தாலும், மனம் அலைபாய்கின்றதே?

பதில் : நாமகீர்த்தனததை அங்கேயும் இங்கேயும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சொல்லாமல், கண்களை மூடிக்கொண்டு ஒரு இடத்தில் அமர்ந்து, சில மணி நேரங்கள் சொல்லி பழகவும். அல்லது எதிரில் கிருஷ்ணனுடைய படத்தை வைத்து கொள்ளவும். அந்த படத்தை மட்டும் பார்த்துக்கொண்டு, வேறு எதையும் பார்க்காமல், சொல்லி வரவும். இப்படி சொல்லி வர சொல்லி வர, மனம் அடங்கும்.

# சிறப்பு பிரார்த்தனை கூட்டங்கள்

– ருத்ரேசன்

ஸர்வ மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான, மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் சன்னதிக்கு வரும் அன்பர்களின் ப்ரார்த்தனைகள் நிறைவேறி, அவர்கள் கஷ்டங்கள் நீங்கப்பெற்று, மகிழ்ச்சியுடன் மீண்டும் மீண்டும் சன்னதியை அவர்கள் நாடி வருகின்றனர். வாழ்வில் பல விதத்திலும், அல்லலுறும் அன்பர்களின் துயர் நீங்க பகவானிடம் பிரார்த்தனை செய்வதற்கென்றே, கருணாமூர்த்தியான நம் குருநாதர் கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் தாசர் திரு.பம்மல் பாலாஜி அவர்களை நியமித்துள்ளார். பல ஆண்டுகளாக, பெருமாளின் சன்னதியில், திரு.பம்மல் பாலாஜி அவர்களின் ப்ரார்த்தனையினால் பலனடைந்தவர்கள் ஏராளம்.



சன்னதிக்கு நேரடியாக வரமுடியாத அன்பர்களின் நலனை முன்னிட்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிற ஊர்களுக்கும் சென்று ப்ரார்த்தனையை செய்ய திரு.பம்மல் பாலாஜி அவர்களை பணித்துள்ளார்கள். அதனை முன்னிட்டு கடந்த டிசம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி, தூத்துக்குடி, மதுரை ஆகிய இடங்களில் சுமார் 1500அன்பர்களுக்காக தனிப்பட்ட முறையில் ப்ரார்த்தனை செய்தார். அவற்றில் பலருடைய பிரார்த்தனைகள் குருவருளால் உடனே நிறைவேறியது மிகவும் மகிழ்ச்சியான விஷயம்.


உதாரணமாக, டிசம்பர் 3ஆம் தேதி சனிக்கிழமை சிவசங்கரன் எனும் அன்பரொருவர், சிவகாசியில் தனது குடும்பத்துடன் வந்திருந்தார். தான் ஒரு நிதி நிறுவனத்தில் ஏஜெண்டாக வேலை பார்த்து வந்திருந்ததாகவும், திடுமென்று அந்நிறுவனம் ஏஜெண்டுகளை வேலையிலிருந்து நீக்கி விட்டதாகவும் கூறி

அழுதார். அன்பருக்கு இருந்த துயரை துடைக்குமாறு தாசரும் பெருமாளிடம் மனமுருகி வேண்டினார். “பெருமாள் அருள் நிச்சயம் கிடைக்கும்” என்று அன்பருக்கு ஆறுதல் கூறி அனுப்பினார் பாலாஜி. அவ்வன்பரும் வீட்டிற்கு திரும்பி சென்றார். 5ஆம் தேதி திங்கட்கிழமை இருதினங்களே கழிந்த நிலையில், அவ்வன்பரிடமிருந்து கைபேசியில் அழைப்பு வந்தது. என்னவென்று விசாரித்தால், அந்த நிதி நிறுவனம் அவருக்கு நிரந்தர வேலைக்கான, சிறப்பு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரையே கொடுத்து விட்டார்களாம்! இப்படி பெருமாள் பண்ணிய லீலைகள் பல. அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக வரும் இதழ்களில் பார்த்து வருவோம்! 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் தேதி திருச்சியிலும், 5ஆம் தேதி அம்பாசமுத்திரத்திலும், 10ஆம் தேதி பெரியகுளத்திலும், 11ஆம் தேதி வத்தலகுண்டுவிலும், 12ஆம் தேதி பழனியிலும், 13ஆம் தேதி உடுமலைப்பேட்டையிலும் அன்பர்களுக்காக சிறப்பு ப்ரார்த்தனையை திரு.பம்மல் பாலாஜி மேற்கொள்ள உள்ளார்.

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
website: www.rajmanibuilders.com

# தெய்வத்தமிழ் இசைவிழா 16.12.2011–22.12.2011

சென்னை அசோக்நகர் மஹோதயா ஹாலில் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திராவின் சார்பாக, ஐந்தாவது ஆண்டு தெய்வத்தமிழ் இசை விழா மிக சிறப்பாக நடைபெற்றது. துவக்க நாளன்று, திரு.R.B.V.S.மணியன் அவர்கள், தற்காலகட்டத்திற்கு தெய்வத்தமிழ் இசையின் அவசியம் குறித்தும், திருமதி.N.சாரதா அவர்கள் தமிழ்இசை குறித்து அரிதான கருத்துக்களையும் அழகாக எடுத்து பேசினர். தொடர்ந்து ஐந்து நாட்கள் திவ்யப்ரபந்த, தேவார, திருவருட்பா மற்றும் பாரதியார் பாடல்களும், நந்தனார் சரித்திர கீர்த்தனமும் பிரபல கலைஞர்களால் இசைக்கப்பெற்றது. பூர்த்தி நாளன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள், சத்சங்க அன்பர்களால் மிக அழகாக பாடப்பபட்டது. அன்பர்கள் திரளாக வந்திருந்து, தெய்வத்தமிழ் இசையை கேட்டு ஆனந்தமடைந்தனர்.





# பாகவத பழம் 22

**பாகம் 2 – அத் 8**

– ஸ்ரீஸ்வாமிஜி

துவாரகைக்குப் புறப்படத் தயார் ஆகி, ரதத்தில் ஏறிய பகவான் கிருஷ்ணன், தன் சரணத்தில் விழுந்த உத்தரையின் வாக்கைக் கேட்டவுடன், இது பூமியில் பாண்டவர்களே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், அஸ்வத்தாமாவினால் ஏவப்பட்ட பிரஹ்மாஸ்திர பிரயோகம் என்பதை அறிந்தான் பகவான். பாண்டவர்கள் அஸ்வத்தாமாவை மன்னித்தபோதிலும் அவனுக்கு நன்றி உணர்வு ஏற்படவில்லையாம். பாண்டவர்கள் தனக்கு உயிர் பிச்சை கொடுத்ததையே அவமானமாக எண்ணினான். பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடவில்லை.

இப்படி உத்தரை பகவானை சரணடைந்த அதேசமயம் பாண்டவர்களை நோக்கி ஐந்து பாணங்கள் வருவதைக் கண்ட பகவான், தன் பக்தர்களுக்கு வந்த ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற, தன் அஸ்திரமான சுதர்சனாஸ்திரத்தை ப்ரயோகம் செய்து ரக்ஷித்தான். தானே உத்தரையின் கர்ப்பத்தில் பிரவேசித்து தன் தேஜஸ்ஸினால் பாண்டவர்களின் ஸந்தானத்தை பிரம்மாஸ்திரத்திலிருந்து காப்பாற்றினான். பகவானின் தேஜஸ் பிரம்மாஸ்திர தேஜஸ்ஸை அடக்கியது. இங்கேயும், பகவான் தனது சுதர்சனத்தினால் மட்டுமே, பரீக்ஷித்தை காப்பாற்றியிருக்கலாம்.

காமம், கோபம், சோகம், மோஹம், பயம், வெறுமை இவை உடலில் இல்லை. பிராணனிலும் இல்லை. அறிவிலும் இல்லை. மனதில்தான் உள்ளது. ஆகவே மனதை வசப்படுத்தி அதை அழித்தால் ஒழிய, ஒருவன் ஒருக்காலும் இவைகளில் இருந்து விடுபட முடியாது..

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

ஆனால் தனது பக்தன், ஒரு பாகவதன் கர்ப்பத்தில் இருந்தால், அங்கேயே சென்று காக்கவும் நான் தயங்கமாட்டேன் என்று, தனது பக்த வாத்ஸல்யத்தைக் காண்பிக்கவே, பகவான் தானே உத்திரையின் கர்ப்பத்தில் சென்று பரீக்ஷித்தை காக்கிறான்.

இப்படி பகவான், தன் குழந்தைகளையும், உத்திரையின் கர்ப்பத்தில் இருந்த சிசுவையும் காப்பாற்றியதைப் பார்த்தாள் குந்தி. வயதில் முதிர்ந்தவளான, அரச குடும்பத்தைச் சேர்ந்த அவளுக்கு அஸ்திரங்களைப் பற்றி பரிச்சயம் இருந்தது. பிரம்மாஸ்திரத்திற்கு எதிராக, எந்த அஸ்திரமும் பிரயோகிக்கக்கூடாது என்று நன்கு அறிந்திருந்தாள். இப்பொழுது, தன் எதிரேயே தன் குழந்தைகளை பகவான் பிரம்மாஸ்திரத்திலிருந்து காப்பாற்றியதைக் கண்ட அவள், பகவானைப் பார்த்து நன்றி மிகுதியுடன், அழகாகத் துதிக்கலானாள். குந்தி இந்தத் தருணத்தில் செய்த துதி "குந்திஸ்துதி" என்று புகழ் பெற்றது. பகவான் கிருஷ்ணனை நமஸ்கரித்தாள் குந்தி.

*நமஸ்யே புருஷம் த்வாத்யம் ஈஸ்வரம் ப்ரக்ருதே: பரம்*
*அலக்ஷ்யம் ஸர்வபூதானாம் அந்தர்பஹிர் அவஸ்திதம்* (1.8.18)

இவ்வாறு நமஸ்கரித்த குந்தியைப் பார்த்து பகவான் கேட்டான்.

கிருஷ்ணன் : என்ன அத்தை நமஸ்காரம் செய்கிறாய்! நான் உன்னைவிட வயதில் சிறியவன் ஆயிற்றே!

குந்தி : இல்லை கிருஷ்ணா! நீ புருஷன் இல்லையா? அதனால் தான் நமஸ்கரித்தேன்.

கிருஷ்ணன் : உனக்கு ஐந்து பிள்ளைகள் உண்டே! அவர்களும் புருஷர்கள்தானே! அவர்களுக்கு எல்லாம் நீ நமஸ்காரம் செய்வதில்லையே!

குந்தி : நீ முதற்காரண புருஷன் ஆயிற்றே! சாமான்யனில்லையே! நீ ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறானவன். அந்தப் ப்ரக்ருதியையும்

ஆளும் ஈஸ்வரனல்லவா நீ. எப்படி ஒருவனால் வேடம் அணிந்த ஒரு நல்ல நடிகனை அவன் யார் என்று அறியமுடிவதில்லையோ அப்படி மாயை என்னும் திரையால் மறைக்கப்பட்ட உன்னை, சாமான்ய ஜனங்கள் அறிவதில்லை.

கிருஷ்ணன் : அத்தை பிறகு நீ எப்படி அறிந்தாய்?

குந்தி : பல கோடி வருடங்கள் கடும் தவம் செய்யும் முனிவர்கள் கூட இன்றுவரை உன் மகிமையை முழுவதுமாக அறிந்தார்கள் இல்லை. ஒரு அக்ஞானியான பெண்ணான நான் எப்படி அறிய முடியும்? தானாக ஏதும் அறியாதபொழுதும், பரமஹம்சர்களின் வாக்கால் உன்னை அடையாளம் கண்டுகொண்டேன். உன்னை மீண்டும் மீண்டும் நமஸ்கரிப்பதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய இயலாதவளாக இருக்கின்றேன், கிருஷ்ணா!

இப்படி தன்னை பரம்பொருளாகத் துதிசெய்ய வந்த குந்தியை, கிருஷ்ணன் விந்தையாகப் பார்க்க, ஒருவேளை தான் செய்யும் துதி அவனுக்கு பிரியமாக இல்லையோ என்று உணர்ந்த குந்தி, கிருஷ்ணனை லலிதமான நாமாவளிகளாகத் துதிக்கத் தொடங்கினாள்.

*க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீநந்தனாய ச*
*நந்தகோபகுமாராய கோவிந்தாய நமோ நம: (பா -1.8.20)*

ஸகுண உபாஸனை செய்பவர்கள் க்ருஷ்ணனை பார்த்து ஏன் எனக்கு இன்னும் க்ருபை செய்யவில்லை, ஞான, பக்தி, வைராக்கியத்தை அருளவில்லை? சீக்கிரமாக அருள் செய் என்று பிரார்த்திக்கலாம். நிர்க்குணமாக அவனை ஆத்மாவாக உபாஸிக்கிறவர்களால் இத்தகைய பிரார்த்தனைகளை செய்ய முடியாது. அதனாலேயே அது முழுவதும் உன் சுய முயற்சியை எதிர்பார்த்துள்ளது.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

குந்தி : கிருஷ்ணா! அந்த வஸுதேவர் உன்னை குழந்தையாகப் பெற செய்த தவம்தான் என்னவோ! மஹா பாக்யசாலியான அந்த தேவகியின் பெருமைதான் என்ன! உன்னை தன் மணிவயிற்றில் சுமந்தாளே. இவர்களைக் காட்டிலும் அந்த நந்தகோபர் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். உன் மழலை முற்றாத சொற்களால் நீ அவரை அப்பா! என்று அழைத்தபொழுது, அவர் அடைந்த ஆனந்தம் எத்தகையதாக இருந்திருக்கும்! கிருஷ்ணா! உன் தாமரை போன்ற முகத்தில், தாமரை போன்ற குளிர்ந்த கண்களும், கமலச் சின்னம் உடைய அன்பர்களுக்கு அபயமாக இருக்கும் உன் திருவடித் தாமரைகளும், நீ அணிந்து இருக்கும் தாமரை மாலையும், கொள்ளை அழகு. நீ காளியன் மீது நர்த்தனம் ஆடும்பொழுது, தேவர்கள் காளியன் சிரசில் தாமரையோ என வியந்தனர்களாமே! இவ்வாறு மற்றவர்கள் செய்த பாக்கியத்தையும் கிருஷ்ணன் அவர்களிடம் கொண்ட கருணையையும் வர்ணித்து வந்த குந்தி, பகவான் தன் மேல் செய்த கருணையை நினைக்கின்றாள்.

குந்தி : "கிருஷ்ணா! உன் தாயான தேவகி மீது உள்ள பரிவைக் காட்டிலும் உனக்கு, என் மேல் தான் பரிவு அதிகம் என்று நான் நினைக்கின்றேன். தேவகியைக்கூட அவள் கம்ஸனால் பட்ட கஷ்டங்களில் இருந்து, பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் விடுவித்தாய். ஆனால் என் விஷயத்திலோ, என்னையும் என் குழந்தைகளையும், அத்தனை ஆபத்துக்களில் இருந்தும் அந்த அந்த கணமே வந்து காப்பாற்றினாயே! எல்லோருக்கும் வாழ்க்கையில் சுகமும் துக்கமும் மாறி மாறி வரும். என் வாழ்விலோ கஷ்டங்களுக்கு மேல் கஷ்டங்கள், கூட்டம் கூட்டமாக வந்து குவிந்தன. ஆனால் கிருஷ்ணா! ஒவ்வொரு கஷ்டமும் வரும் முன்பே, நீ எங்களைக் காப்பாற்ற ஆயத்தமாக வந்து நின்றாயே. அதனால், கஷ்டங்கள் எல்லாம் கஷ்டங்களாகவே தெரியாமல்

போனதே! சிறுவயதில் பீமனுக்கு கொழுக்கட்டையில் துர்யோதனன் விஷம் வைத்துக் கொடுத்தபொழுது, அவன் உயிரைக் காப்பாற்றியது நீதானே! அரக்கு மாளிகையில் உயிருடன் துர்யோதனன் எங்களை எரிக்க முயற்சித்த பொழுது, காப்பாற்றியது நீதானே. துர்யோதனனின் அசத் சபையில் திரௌபதியின் மானத்தை ரக்ஷித்தது நீதானே! வனவாஸத்தில்தான், எத்தனை இன்னல்கள்! அனைத்திலிருந்தும் ரக்ஷித்தது நீதானே! யுத்தத்தின்பொழுது எல்லா மஹாவில்லாளிகளின் அஸ்திரத்திலிருந்தும் என் குழந்தைகளைக் காப்பாற்றினாய். இதோ இந்தக் கணம் அஸ்வத்தாமாவின் அஸ்திரத்திலிருந்தும் காப்பாற்றினாய்" என்றாள். இந்த சந்தர்ப்பத்தில், பகவானின் கிருபையை ஸ்மரிப்பதே பக்தி என்று காட்டுகிறாள் குந்தி.

(கனியும்)

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## ஒற்றுமையின் மேன்மை

ஒரு வேடன் காட்டில் வலை விரித்து பறவைகளை பிடிப்பான். அப்படி பிடித்த பறவைகளை விற்று, உண்டு, இப்படியாக வாழ்க்கை நடத்தி வந்தான். ஒருநாள் காட்டில் வலை விரித்து விட்டு, வெகுநேரம் காத்திருந்தான். வெகுநேரம் கழித்து வந்து பார்த்த அவனுக்கு, ஒரே மகிழ்ச்சி. என்றைக்கும் இல்லாத அளவிற்கு, நிறைய பறவைகள், அந்த வேடன் விரித்த வலையில் சிக்கியிருந்தன. ஆனால், அவன் எதிர்பார்க்காத ஒன்று அப்பொழுது நிகழ்ந்தது. என்ன அது? பறவைகள் நிறைய அன்று வலையில் இருந்ததால், அவைகள் அனைத்தும் வலையை தூக்கி கொண்டு பறக்க ஆரம்பித்தன. இதை கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

வேடன், அந்த பறவைகள் வலையை தூக்கிக் கொண்டு பறக்கும்பொழுது, அவைகளை தொடர்ந்து, அவனும் ஓடிக்கொண்டே இருந்தான். அவனுடைய செய்கையை பார்த்து, எல்லோரும் ஏளனம் செய்தார்கள். அவனை முட்டாள் என்று கூறினார்கள். ஆனால் வெகுதூரம் பறந்த பறவைகளின் வலை 'பொத்'தென்று கீழே விழுந்தது. வேடனும் வலையை பிடித்து, பறவைகளை பிடித்து கொண்டான். பறக்கும் பறவைகளின் வலையை தொடர்ந்து ஓடியபொழுது, ஏளனம் செய்தவர்கள் எல்லோரும் இப்பொழுது வாயடைத்து நின்றார்கள்.

எல்லோரும் அந்த வேடனை பார்த்து, "எந்த நம்பிக்கையுடன் வலையை தொடர்ந்து ஓடினாய்" என்று கேட்டார்கள். அதற்கு அவன் சொன்னான், "முதலில், நான் அந்த பறவைகளை தொடர்ந்து ஓடியது உங்களுக்கு முட்டாள்தனமாக பட்டது. நான் அப்படி நினைக்கவில்லை. இவ்வளவு பெரிய வலையை, அந்த பறவைகள் தூக்கி செல்வதற்கு என்ன காரணம் என்று யோசித்தேன். அந்த பறவைகள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதால், இப்படி வலையுடன் பறக்க முடிகின்றது என்பதை அறிந்து கொண்டேன். அதே சமயத்தில் இந்த பறவைகளின்

ஒற்றுமை, நீண்ட நேரம் நீடிக்காது. அவைகளுக்குள் தகராறு வரும். அப்பொழுது வலை 'தொப்'பென்று கீழே விழும் என்பதை எதிர்பார்த்து சென்றேன். நான் எதிர்பார்த்தது போலவே நடந்தது என்றான். எல்லோரும் அவனுடைய புத்திசாலித்தனத்தை மெச்சினார்கள்.

அவனோ, "எப்பேர்ப்பட்டவர்களாலும் நீண்ட நாட்கள் ஒற்றுமையாக இருக்க முடியாது என்ற ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள என்ன பெரிய புத்திசாலித்தனம் தேவையுள்ளது" என்று நினைத்து கொண்டான். பாலகர்களே! மஹாபாரதத்தில் இந்த கதை வருகின்றது. எந்த விஷயத்தில், நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஒற்றுமையாக உள்ளோமோ, அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கையில் நமக்கு நன்மைகள் உண்டு. முதலில் எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய அறிவு, மனது, உடல் மூன்றும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். அப்படி செயல்பட்டால், வாழ்க்கை சாந்தியாக அமையும்.


**Buddies**
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- SOFTWARE DEVELOPMENT
- WEB MARKETING
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313
E-mail: contact@buddiesinfotech.com

ஒரு வீட்டில் உள்ள பெண் குழந்தையை, பெண் பார்க்க மாப்பிள்ளை வருவதாக ஏற்பாடாகி இருந்தது. மாப்பிள்ளை நல்ல படிப்பு, குணம், வருமானம், வசதி, அழகு எல்லாம் இருந்ததால், எப்படியாவது இந்த இடத்தை முடித்து விட வேண்டும் என்று பெண் வீட்டார்கள் பெரும் முயற்சி எடுத்து கொண்டார்கள். வீட்டை அழகாக அலங்கரித்தார்கள். மங்கள வாத்யங்கள் எல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். வருபவர்களுக்கு, நல்ல விருந்தும் ஏற்பாடு செய்திருந்தார்கள். பெண்ணிற்கு மிகவும் அழகாக அலங்காரமும் செய்திருந்தார்கள். இவை எல்லாம் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தாலும், பையன் பெண்ணை பார்த்துவிட்டு சரி என்று சொல்லவேண்டும்; அதுதானே முக்கியம்! அதுபோல் நாம் எவ்வளவு ஜபம், தியானம், யோகம், பூஜை, தீர்த்தயாத்திரை இவைகளை செய்தாலும், இதனால் பகவான் சந்தோஷப்பட்டு, பகவான் நம்முடைய பக்தியை அங்கீகரிக்க வேண்டும். அதனால், கீர்த்தனம் செய்யும் பக்தன் பகவானுடைய சந்தோஷமே முக்கியம் என்பதை மனதில் கொண்டு, கீர்த்தனம் செய்ய வேண்டும்.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

சனாதனப் புதிர் - பகுதி - 35 –ஆத்ரேயன் ( விடைகள் அடுத்த இதழில்)

1. மகரிஷி அத்ரி , அவரது மனைவி அனஸூயா இவர்களின் மூன்று புதல்வர்கள் யார்?
2. இந்த மூன்று புதல்வர்களும் யாருடைய அம்சம்?
3. தத்தாத்ரேயரின் சிஷ்யர் யார்?
4. தத்தாத்ரேயர் எழுதிய நூல்கள் யாவை?
5. தத்தாத்ரேயர் தனது நூலான அவதூத கீதையை முதலில் யாருக்கு உபதேசித்தார்?
6. தத்தாத்ரேயர் ஜயந்தி எப்பொழுது கொண்டாடப் படுகிறது?
7. தத்தாத்ரேயர் அவதாரத்தைப் பற்றி எந்த புராணம் உயர்வாகப் பேசுகிறது?
8. ஞானேஸ்வரரின் தாய் , தந்தை பெயர் என்ன? அவர் எழுதிய நூல்கள் என்ன?
9. ஞானேஸ்வர் தனது எத்தனாவது வயதில் இந்த உலகத்தை துறந்தார்?
10. ஞானேஸ்வரரின் சகோதரர் சகோதரி பெயர் என்ன?



**With Best Compliments From:**
**RM VENKATESH B.A.B.L - ADVOCATE**
- Property Law Cases
- Legal Consultant / Legal Opinion

Address for contact: 121A/51A,
Pillayar Koil street, Jafferkhanpet, Chennai- 83
Mob: 9444404780 Email: venkateshadv@sify.com

## சனாதனப் புதிர் : பகுதி – 34 விடைகள் –ஆத்ரேயன்

1. ஜகன்நாத் மிஸ்ரா , சசிதேவி
2. பத்தாவது குழந்தை
3. தந்தை விஸ்வம்பரா என்றும் தாய் நிமாயி என்றும் அழைத்தனர்.
4. கௌரங்கா
5. ஒன்பதாவதாகப் பிறந்த அண்ணனின் பெயர் விஸ்வரூபா. மற்ற எட்டு குழந்தைகளும் இறந்து விட்டனர்.
6. கங்காதாஸ் ; வாஸுதேவ சார்வபௌமன் ; ஈஸ்வர புரி ; ஸ்வாமி கேசவ பாரதி.
7. நமஸ்தே கோபிமோஹன சியாம் கோபால்
8. லக்ஷ்மி வல்லப ஆசார்யாவின் பெண். பாம்பு கடித்து இறந்து விட்டார். பிறகு சனாதன மிஸ்ராவின் மகளாகிய விஷ்ணுப்பிரியாவை மணந்தார்.
9. ஸ்ரீ சைதன்யர் சூட்டிய பெயர் ஹரிதாஸ்.
10. அவரது நான்காவது குருவான ஸ்ரீ கேசவ பாரதி.
11. ஜகன்நாத் புரியில் பகவான் கிருஷ்ணருடன் இரண்டறக் கலந்தார்.
12. ஞானேஸ்வர் ; ஆண்டாள் ; மீரா ; துகாராம் ; ராமலிங்க அடிகள் ; ஸ்ரீதர அய்யாவாள் மற்றும் பலர்.

### செய்தி

மஹாரண்யம் கிராமத்தின் பிரதானசாலை இருளடைந்திருந்த காரணத்தினால், இரவில் வீடு திரும்பும் மக்கள் சிரமப்பட்டு வந்தனர். கிராம பஞ்சாயத்து தலைவரின் வேண்டுகோளின் பேரில், பத்து தெருவிளக்குகள், நமது ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்டின் சார்பாக, கிராமத்திற்கு கொடுக்கப்பட்டது. இதனை சாந்தீபனி குருகுல அத்யாபகர் ஸ்ரீ ஜகதீஷ் சர்மா வழங்க, மஹாரண்யம் கிராம பஞ்சாயத்து தலைவர் பெற்று கொண்டார்.



# சென்ற மாத சத்சங்கங்கள்

**நவம்பர் 25 – மதுரை** வி.எஸ்.செல்லம் ஹாலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. ஏராளமான அன்பர்கள் இதில் கலந்து கொண்டு பயனுற்றனர். அன்று ஸ்ரீஸ்வாமிஜி **தூத்துக்குடி நாமத்வாருக்கும்** சென்றிருந்தார்கள். **நவம்பர் 30** அன்று **திருச்சி நாமத்வாருக்கு** ஸ்ரீஸ்வாமிஜி சென்றிருந்தார்கள். அன்று மாலை ஸ்ரீரங்கத்தில், ரங்கபவனம் கல்யாண மண்டபத்தில், நாம உபாஸனை செய்த பல பக்தர்களை குறித்து, அருளுரை வழங்கினார்கள்.

**டிசம்பர் 8 – பெங்களூர்** கல்கரே கிராமத்தில் உள்ள **ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர்** திருக்கோவிலில் நடைபெற்ற, அனுமத்ஜெயந்தி விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். அனுமாருக்கு விசேஷ திருமஞ்சனமும் பூஜையும் மாலையில் புறப்பாடும் இடம்பெற்றிருந்தது.

**டிசம்பர் 21 – காஞ்சி மஹாஸ்வாமிகள் ஆராதனை** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்றது. **டிசம்பர் 17–28** – மதுரபுரி ஆஸ்ரமத்தில் திவ்ய ப்ரபந்த **அத்யயன உத்ஸவம்** மிக சிறப்பாக நடைபெற்றது. **டிசம்பர் 24 – கன்யாகுமரி ஜய ஹனுமாருக்கு அனுமத் ஜயந்தியை** முன்னிட்டு விசேஷ திருமஞ்சனமும், பூஜையும் நடைபெற்றது. பெருந்திரளான அன்பர்கள் வந்திருந்து, குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர். **நவம்பர் 27 –** கார்த்திகை மாத **வனபோஜன வைபவம்** மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸன்னதியில் விசேஷமாக அனுபவிக்கப்பட்டது. அன்பர்கள் பாடி ஆடிக்கொண்டு, பகவானுடன் மஹாரண்யம் காட்டு பகுதிக்குள் பிரவேசித்தனர். அங்கு பெருமாளுக்கு, திருமஞ்சனம் நடந்து பின் கிராமத்திற்குள் எழுந்தருளி மாலை கோவில் திரும்பினார். காடுகளை காப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில், பெருமாள் முன்னிலையில் புன்னை, நெல்லி மரக்கன்றுகள் நடப்பட்டது.

**அயல்நாடுகளில் சத்சங்கங்கள்**

ஆஸ்திரேலிய சத்சங்கங்களின் தொடர்ச்சியாக, பாக்யநாதன்ஜி **பப்புவாநியு கினியா** நாட்டிற்கு சென்றிருந்தார். இது ஆஸ்திரேலியாவிற்கு வடக்கே 170கி.மீ. தொலைவில் உள்ளது. பல்வேறு தரப்பட்டவர் இங்குள்ளனர். இயற்கை வளங்கள் நிரம்பிய இந்நாட்டில், மூன்றுமஹாமந்திர கீர்த்தன சத்சங்கங்களை நவம்பர் 19 முதல் 21வரை நிகழ்த்தினார். இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் பாக்யநாதன்ஜி எவருடைய இல்லத்திற்கு செல்லவிருந்தாரோ, அங்கு செல்லும் முன்னரே, அவ்வில்லத்திற்கு ஒரு மூன்றடி உயரமுள்ள ஸ்ரீகிருஷ்ண விக்ரஹத்தை யாரோ ஒருவர் பரிசளித்து சென்றிருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அனுக்ரஹம் இந்த சத்சங்கங்களுக்கு பூரணமாக இருந்தது என்பதற்கு இதுவுமோர் அடையாளம்.

நவம்பர் 22 முதல் 24வரை சிட்னி, ஆஸ்திரேலியாவில் பல அன்பர்களின் இல்லங்களில் குரு பரம்பரையின் மஹிமை குறித்து பேசினார். நவம்பர் 26அன்று Moera Community Hall, Wellington, New Zealand இல் ஒரு மஹாமந்திர கீர்த்தன சத்சங்கத்தில் கலந்து கொண்டார். பப்புவா நியூ கினியா போலவே **நியூசிலாந்திலும்**, இதுவே குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியின் முதல் சத்சங்கம். இங்கு பேசுகையில், நாமம் சொல்லி வருவோர் முன் நிச்சயம் பகவான் தோன்றுவான் என்று ஸ்ரீஸ்வாமிஜி சொல்வதை வலியுறுத்தி பேசினார். அடுத்து இருதினங்கள் அன்பர்கள் இல்லங்களிலும் 27அன்று வெல்லிங்டன் குமரன் கோவிலிலும் பாகவதம் மற்றும் நாம மஹிமை குறித்தும், வெல்லிங்டன் பல்கலைக்கழகத்தில் Timeless wisdom of our scriptures என்ற தலைப்பிலும் பேசினார். பெருமை மிக்க இப்பல்கலைக்கழகத்தினர் இத்தகைய சத்சங்கங்களில் மிகவும் விருப்பம் கொண்டனர்.

நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் **ஆக்லாந்தில்** சில அன்பர்களின் இல்லங்களில் இருந்த சத்சங்கங்களில் பாக்யநாதன்ஜி

கலந்து கொண்டு பேசினார். இங்கு குருநாதரின் திருவடிகளின் சரணடைந்து இருப்பதே எப்பொழுதும் மகிழ்வுடன் இருப்பதற்கு நல்ல உபாயம் என்று பேசினார். டிசம்பர் 2ஆம்தேதி ஆக்லாந்து பல்மோரா கோவிலிலும், 3ஆம் தேதி குருநாதரின் சரித்திரம் "மதுரஸ்மரணம்" குறித்து ஒரு அன்பரின் இல்லத்திலும் பேசினார்.

டிசம்பர் 9ஆம் தேதி மெல்போர்ன் நகரில் **Bays Water temple**இல் பகவன் நாம மஹிமை குறித்து உபன்யாசம் செய்தார். மெல்போர்ன் நகரில் 10, 11 தேதிகளில் ஒரு விநாயகர் கோவிலிலும், குழந்தைகளுக்கான கோபகுடீர நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். டிசம்பர் 11 அன்று மெல்போர்ன் நகர் துர்க்கை, குருகன் கோவில்களில் இரு சத்சங்கங்களையும், ஸ்கவுட் ஹாலில் ஒரு சத்சங்கமும் நிகழ்த்தினார். இந்த துர்க்கை கோவில் நிர்வாகத்தார் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனை கோவிலில் ப்ரதிஷ்டை செய்து கொள்ள விரும்பியது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று. அன்றே ஏஷியா விஷன் தொலைக்காட்சிக்காக பாக்யநாதன்ஜி " Our Master and His message of Love" , " The purpose of Namadwaar", " Global organisation for Divinity" and " Mind power and mahamantra" ஆகிய தலைப்புகளில் பேசினார். டிசம்பர் 6, 7, 12,13, 15, 19, 23 தேதிகளில் முறையே வென்ட்வொர்த்வொய்ல், டிரியூட், ரூட்டி ஹில், க்லென்வுட், பாங்க்ஸ்டவுன், ஸ்ட்ராத்ஃபீல்ட், சொர்ரிப்ரூக் இடங்களில் ஆஸ்திரேலியா சிட்னியில் சில சத்சங்கங்களை நிகழ்த்தினார். பாக்யநாதன்ஜி ஆஸ்திரேலிய பயணங்களில் பலருடன் அளவளாவுகையில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "காக்க காக்க குருவருள் காக்க" மற்றும் "வீடு தேடி வருவான் விட்டலன்" அருளுரைகளை தொடர்ந்து கேட்டு, பயனுற்றவர்கள் அநேகர் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள முடிந்தது. இதன் பின், அவர், டாஸ்மானியா சத்சங்கங்களில் கலந்து கொள்ள சென்றார்.

**வளைகுடா நாடுகளில் சத்சங்கங்கள்**

இங்கிலாந்து சத்சங்கங்கள் முடிந்த பிறகு ராமானுஜம்ஜி ஐக்கிய அரபு நாடுகளில் சில நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள சென்றிருந்தார். டிசம்பர் ஒன்றாம் தேதியன்று பாகவதத்தில் சுகர் சொல்லும் குருவை பற்றிய மகிமைகள் குறித்து பேசினார். மறுநாள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அன்பர்கள் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை பற்றி பேசினார். டிசம்பர் 2,3 தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "கலியையும் பலிகொள்ளும்" கீர்த்தனத்தில் வரும் மஹாமந்திரத்தின் சிறப்புகள் குறித்தும், சத்சங்கத்தின் மஹிமை குறித்தும் பேசினார். டிசம்பர் 3ஆம் தேதியன்று, விஷ்ணுசஹஸ்ர நாமங்களின் அர்த்தம் குறித்தும் சிவ, விஷ்ணு வழிபாடு எதுவானாலும் கலியுகத்தில் நாமகீர்த்தனம் ஒன்றே பகவானை அடைய செய்யக்கூடிய தவம் என்றும் பேசினார்.

டிசம்பர் 4ஆம் தேதியன்று, பாகவத தசம ஸ்கந்தத்தில் கிருஷ்ணனின் ஜனனம் குறித்து பேசுகையில், பாகவதம் ஸ்வயம் கிருஷ்ணனே என்றும், 6,7,8 தேதிகளில் குருவின் கருணை எப்படி ஒரு ஜீவனை ஸம்ஸார துக்கத்திலிருந்து காப்பாற்றுகிறது என்பது குறித்தும் பேசினார். 9ஆம் தேதி சிந்தி செரிமோனியல் சென்டரில் பகவத்கீதை குறித்து விரிவாக பேசிய பின்னர், அன்று ஒரு சத்சங்கத்தில் ராமாவதாரம் குறித்து பேசுகையில், ராமன் சகலருக்கும் ஏற்ற ஒரு ஒப்பற்ற உதாரண புருஷனாக விளங்குகிறான் என்றும் அந்த சத்சங்கத்தின் பூர்த்தியில் அனுமத் ப்ரபாவம் குறித்தும் பேசினார்.

இந்த சத்சங்கங்கள் அனைத்தும் பல பக்தர்களின் இல்லங்களில் இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு உபன்யாசத்தின்பொழுதும் ராமானுஜம்ஜி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபதேசங்களை மிக தெளிவாக எடுத்து பேசினார். அனைத்து சத்சங்கங்களிலும் மஹாமந்திர கீர்த்தனம் மிக சிலாக்கியமாக இடம்பெற்றது. ஐக்கியஅரபுநாட்டு அன்பர்கள் ஒன்பது நாட்களிலும் மிக அழகான

சத்சங்கத்தில் திளைத்தனர் என்பது தெளிவு.

இதன் பின்னர் மஸ்கட்டிலும், சில சத்சங்கங்களை நிகழ்த்தி விட்டு, ராமானுஜம்ஜி சென்னை திரும்பினார். இதில் சிறார்களின் நல்ல வளர்ப்பிற்கான நிகழ்ச்சிகளும், நிறுவனங்களின் பணிபுரிவோரின் முற்போக்கு சிந்தனைக்கான நிகழ்ச்சிகளும், தனிமனிதனின் சுயமுன்னேற்றத்திற்கான நிகழ்ச்சிகளும், சென்ற முறை போலவே இடம் பெற்றிருந்தன.

லண்டன் பாராளுமன்றத்தில் சிறப்பாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் செய்தியை எடுத்துரைத்து, பின் பல நாடுகளில் அருமையான சத்சங்கங்களை நிகழ்த்திய பின், டிசம்பர் 23 அன்று சென்னை திரும்பிய ராமானுஜம்ஜிக்கு, சென்னையில் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி அன்பர்களால் மிக சிறந்த வரவேற்பு கொடுக்கப்பட்டது.

New CDs Released from :
Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra
**Available in "MADHURAM" Bookstall** - 38/22, Thambaiya road Extn, West Mambalam, Chennai - 600 033



## *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*

- ஜனனி

### ஸ்ரீகிஷோரி சரண்பாபா– 3

ப்ருந்தாவனத்தை சேர்ந்த ஸ்ரீகிஷோரி சரண்பாபா ஒரு ஸித்தயோகியாகவும் இருந்தார். ஒருமுறை அவரது உடல்நிலை மிகவும் மோசம் அடைந்தது. அப்பொழுது, வைத்தியர்கள் அறுவை சிகிச்சை செய்தே ஆக வேண்டும் என்று கூறினர். உள் உறுப்பு ஒன்று மிகவும் மோசமாக அழுகி இருப்பதாக, அவர்கள் கூறினார்கள். மறுநாள் காலை பாபா ஆஸனத்தில் அமர்ந்து, யோக கிரியைகள் சிலவற்றை செய்து இருமல் மூலமாகவே, அந்த உறுப்பை வெளியே கொணர்ந்து விட்டார். தனது யோகசாதனைகளில் பாபா தனது உடலை, தானே சுத்தம் செய்து கொள்வார்.

ஒருமுறை அவருடைய ஆச்சர்யமான யோக சித்தி ஒன்றை கண்டு, அனைவரும் ஸ்தம்பித்து விட்டனர். அவர் தில்பத் மற்றும் போகல் எனும் இரண்டு ஊர்களில் நடைபெற்ற நாமஸங்கீர்த்தனத்தில், ஒரே சமயத்தில் இரண்டு ரூபங்களை எடுத்துக்கொண்டு பங்கேற்றார்.

பாபா ஒரு பெரிய வித்வானாகவும் திகழ்ந்தார். அவர் எப்பொழுது எங்கே இவ்வளவு வித்யையும் கிரஹித்தார் என்று யாருக்கும் தெரியாது. அனைத்து வேதம், உபநிடதம், இதிஹாஸம் மற்றும் புராணங்களின் நுணுக்கங்களையும், அவர் நன்கு அறிந்திருந்தார். தர்மத்தை போதிக்கும் புத்தகங்களை வெளியிடுவதில், அவருக்கு மிகுந்த ருசி இருந்தது. “ராதாசுதாநிதி” என்ற ஹரிவம்சரின் மிகவும் ரஸமயமான கிரந்தத்திற்கு, ஸ்ரீஹரிலால் என்பவர் “ரஸகுல்யா” எனும் டீகா எழுதி இருந்தார். அதை பாபா பிரசுரம் செய்து, இலவசமாக எல்லோருக்கும் வினியோகம் செய்தார். “ஸ்ரீஹிதஸ்புடவாணீ” மற்றும் “ஸ்ரீநாகரிதாஸ் ஜீ கி வாணி” எனும் புத்தகங்களையும் பிரசுரம் செய்தார் பாபா. பாபா கட்வால் எனும் கிராமத்தில் ஒரு நல்ல அந்தண குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே அவரது பெற்றோர்கள் மறைந்து விட்டனர். இதனால், அந்த இளம் பருவத்திலேயே,

அவருக்கு இந்த ஸம்ஸாரம் “குடம் கவிழ்நீர் போல் ஸ்திரமில்லாதது; உறவுகள் எல்லாம் பொய்; இதிலிருந்து நிரந்தரமான சுகமோ சாந்தியோ ஒருபொழுதும் கிடைக்காது” போன்ற எண்ணங்களே மேலோங்கின. அழிவில்லாத ஸாஸ்வதமான ஆனந்தத்தை தேடி அவர் வீட்டை விட்டு இமயமலை பக்கமாக சென்றார். கங்கோத்ரி அருகில் ஆனந்தகிரி எனும் ஸன்யாசியை அவர் சந்தித்தார். அவரிடமிருந்து சன்யாசம் பெற்றுக்கொண்டு அங்கேயே ஒரு குகையில் தியானம் செய்யலானார். ஆனால் ரஸமான அவரது மனதிற்கு, இந்த ஸாதனை ஒரு உரலில் வைக்கோலை வைத்து உலக்கையால் குத்துவது போலிருந்தது.

அச்சமயம் அவருக்கு பாக்யவசமாக பரஸ்ராம்தாஸ் எனும் ஒரு வைஷ்ணவ மஹாத்மாவின் சங்கம் ஏற்பட்டது. அவரது சங்கத்தால் பாபாவின் ஹ்ருதயம் ராதாகிருஷ்ணரிடம் ஈர்க்கப்பட்டது. அவர்களது ஸ்மரணத்திலேயே அவர் பிருந்தாவனம் வந்தடைந்தார். ப்ருந்தாவனத்தில் சித்தஸ்ரீபரமானந்ததாஸ்ஜி என்ற மஹானிடமிருந்து வைஷ்ணவ தீக்ஷை பெற்று, அங்கேயே வசித்து டாகுர் ஸ்ரீஸ்யாமாவல்லபஜிக்கு, அஷ்டயாமசேவை செய்வதிலேயே ஆனந்தம் அடைந்தார். பரமானந்தஜி சித்தி அடைந்த பின், இவ்விடத்தையே விஸ்தாரமாக்கி, இப்பொழுதுள்ள ஸ்யாமகுஞ்ச் என்ற இடமாக ஆக்கினார் பாபா. பாபா நாமத்தில் மிகவும் நிஷ்டையுடையவர். சைதன்யமஹாபிரபுவின் “ஜீவோ தயா, நாமே ருசி” “ஜீவர்களிடம் தயை; நாமத்தில் ருசி” எனும் கொள்கையின் அடிப்படையில் அவர் எப்பொழுதும் நாமஸ்மரணம் செய்தவாறே வெளியில் லோக உபகாரமான காரியங்களிலேயே, தன்னை ஈடுபடுத்தி கொள்வார். அவர் எங்கு சென்றாலும், அவருடைய ஸ்வஜனங்கள் ப்ரேமையின் மேலீட்டால், அவருக்கு ஏராளமான பரிசுகளை அளிப்பார்கள். (தொடரும்)

**மாலே மணிவண்ணா –103**

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

அறிதுயிலோனாக இருந்து, ஆருயிர்களின் ஈடேற்றத்தை எப்பொழுதும் சிந்தித்து அருளும், பகவானது முதல் நிலையை சொல்லி, அடுத்து அளவிலா ஆற்றலோடு தோன்றிய அவதார சிறப்பை சொல்ல வருகிறார்.

*மறம் மிகு மலி ஒலி மாறடு தானையால்*
*திறன் இகந்து வரூஉம் அவர் உயிர் அகற்றும்*
*விறல் மிகு வலி ஒலி பொலி புகழ் புழுதியின்*
*நிறன் உழு வளைவாய் நாஞ்சிலோனும்*

என்ற பகுதி இரண்டாவது நிலையாக பலராமனை குறிக்க வருகிறது.

மறம் மிக்க பகைவரை அழிக்கும் சேனையுடனே ஒழுக்கம், உடைமையை கடந்து வருகின்ற பகைவர் உயிரை போக்கும் மென்மேலும் வெற்றி பெறும் வலியும், அதனால் உண்டாகிய ஆரவார ஒலியும் பொலிந்து, புழுதியை தோண்டி உழுமாறு போல பகைவர் மார்பை உழுகின்ற கலப்பை என்னும் படையை உடையவனாகிய பலராமனாகவும் தோன்றுகிறாய் என்கிறார்.

(மறம் - வலிமை; மாறு அடு தானை - எதிரியை அழிக்கும் சேனை; திறன் இகந்து - ஒழுக்கம் கடந்து; விறல் - வெற்றி; மண்ணின் மார்பை கலப்பை உழுதலின் புழுதியின் நிறன் (மார்பு) உழுநாஞ்சில் என்றார். பலராமனது படை நாஞ்சில் எனும் கலப்பையாகும் நிலத்தில், உழும்பகுதி வளைந்திருக்கும் ஆதலின் வளைவாய் நாஞ்சில் என பெற்றது.

சங்ககாலத்து தமிழர்தம் கடவுட்கொள்கை, நாற்பெருந்தெய்வ வழிபாடு; பலராமன், கண்ணன், முருகன், சிவன் என்ற நாற்றெய்வ வழிபாட்டை சங்கத்தமிழ் சாற்றும்.

*“ஞாலம் காக்கும் கால முன்பின்*

*தோலா நல்லிசை நால்வருள்ளும்”* என்ற புறநானூறு பலராமனை “வலி ஒத்தீயே வாலியோனை” என்று கூறுகிறது. பலராமன் வெண்ணிறம் உடையவன் ஆதலின், “வாலியோன்” என பெற்றான். அவன் வலிமையில் பிறருக்கில்லாத பேராற்றல் உடையவன் ஆதலின், வலியாற் சிறப்பெய்தியவன். அச்சிறப்பை பரிபாடலும் இங்கு அறிந்து போற்றுகிறது. இறைவனது எண்குணங்களுள் “அளவிலா ஆற்றல் என்பதும் ஒன்று” - பகவான் என்பதில் உள்ள ஆறு சிறப்புகளுள் சக்தி, பலம், வீரியம் என்ற மூன்றும் அளவிலா ஆற்றலையே குறிக்கின்றன. தீய சக்திகளை அழிக்கும் பேராற்றல், அவனுக்குண்மையை இத்திருமேனி அறிவிக்கிறது.

இனி, அவன் ஆதிவராகமாக அவதரித்து, உயிர்களுக்கு நலம் செய்த பாங்கினை மூன்றாவதாக தருகிறது பரிபாடல்

*நானிலம் துளக்கு அற முழு முதல் நாற்றிய*

*பொலம்புனை இதழ் அணி மணி மடல் பேரணி*

*இலங்கு ஒளி மருப்பின் களிறும் ஆகி*

உலகம் நடுக்கம் நீங்கும்படியாக தலைமுதல் கால்வரை தொங்கவிடப்பெற்ற, பொன்னாற்செய்யப்பெற்ற இதழ்களால் அழகு பெற்ற ஒளியுடைய மணிமாலை அணிந்த பெருமை உடைய அழகோடு விளங்கும் ஒளியுடைய, கிம்புரி (பூண்) அணிந்த கொம்பினை உடைய ஆதிவராகமும் ஆனாய் என்றார்.

நீருள் மூழ்கிய நிலத்தை எடுத்து மேலே கொண்டு வைத்து உயிர்களை காத்தலின், ஆதி வராகம் அருளாற் சிறந்தது. முன்னானார் எல்லார்க்கும் முன்னவனாக இருந்து, நீர் தோன்றி நிலம் தோன்றாதபோது, நீருள் மூழ்கிய நிலத்தை எடுத்து காத்தலின் “ஆதி வராகம்” என பெயர் பெற்றார். தன்னை தாழவிட்டு கொண்டு, உயிர்க்கு அருள்செய்பவன் எம்பெருமான் என்பதனை ஆதிவராக

அவதாரம் உணர்த்துகிறது.

எல்லாமாய், எல்லாவற்றுள்ளும் உறைந்து, எல்லாவற்றையும் எப்போதும் உணர்ந்து, சிந்தித்து, யோக நிலையில் அறிதுயிலிலமரும், எம்பெருமானும் அளவிலா ஆற்றல் உடையவனாய், மாற்றாரை அழிக்கும் வன்மையுடைய அலப்படை உடையவனாகிய பலராமனாகிய எம்பெருமானும், தன் துன்பம் என்பதொன்றின்றி, உயிர்களுக்கு நலம் செய்வதே தன் கருத்தாக கொண்டு, ஊழி பெருவெள்ளத்துள் மூழ்கிய பூமியை எடுத்து நிறுத்த, வராக உருவாய் வந்து காத்த, எம்பெருமானாகிய அனுக்கிரஹ மூர்த்தியும் என்று மூன்று வடிவங்களாகவும் தன்னிடத்தே பிரிந்து தோன்றுகின்ற ஒருவனாகவும், நீ உள்ளாய் என்று பெருமானை தோத்திரம் செய்கிறார்.



“மூ உரு ஆகிய தலை பிரி ஒருவனை” என்பதனால் ஒருவனே அரவணைத் துயில்வோனாகவும், பலராமனாகவும், ஆதிவராகமாகவும் உள்ளான் என்பதாகும். இனி அதற்கு இவ்வாறில்லாமல் மூ உரு ஆகிய என்னும் அடிக்கு, மூலப்பகுதி முக்குண வடிவாய் இருத்தலின் முக்குண வடிவாகிய மும்மூர்த்திகளாகவும் நீயே இருக்கின்றாய் என்று பரிமேலழகர் உரைத்தவாறு உணர்தலும் செய்யலாம்.

*புணர்க்கும் அயனாம் அழிக்கும் அரனாம்*
*புணர்த்ததன் உந்தியோடு ஆகத்து மன்னி*
*புணர்ந்த திருவாகி தன் மார்பில் தான்சேர்*
*புணர்ப்பன் பெரும்புணர்ப்பு எங்கும் புலனே* (திருவாய் 2:8:3) என்னும்
ஆழ்வார் அருளிச்செயல் இங்கு அறிந்து இன்புறலாம்

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால் சித்தாராமர் -4

சித்தாராமருக்கு அல்லமர் உருவிலிருப்பது தாம் முன்னர் கண்ட மல்லிகார்ஜுனரே என்று முழுவதுமாக ஸ்புரித்திருந்தது. அவரும் சித்தாராமரும் பின்வருமாறெல்லாம் பேசினர்.

சித்தாராமர்: வணக்கமுடன், "ப்ரபு! வேலைக்காரனின் பிழையை காப்பாற்றும் பொறுப்பு எஜமானுடையதன்றோ? நான் வேலைக்காரன். நீங்கள் எஜமானர். தாங்கள் அருளினால்தானே நான் தங்களை சரியாக ஸ்மரிக்க முடியும் "

அல்லமர் : (கடுமையாக) "குஹேஸ்வரனை வேதமும், சாஸ்திரமும், துதியும் தொட இயலவில்லை. ஒரு கணம் கோபமும் மறுகணம் தாபமும் கொள்ளும் நீர் எப்படி அவனை அறிய முடியும்? வெற்று வார்த்தைகளால் அவன் ப்ரீதியடைவதில்லை".

சித்தாரார‌மர்: ப்ரபு பக்தியினாலும் சரணாகதியினாலும் தங்களை அடைந்தேன். காப்பாற்றுங்கள்.

அல்லமர்: குஹேஸ்வரனை தூற்றுபவர்களுக்கு கூட அவன் எதிரியல்ல. அவன் பேச்சோ மௌனத்திலிருக்கிறது. பக்தியின் ரகசியம் யாருக்கு தெரியும்? அகந்தை அற்றவர்களுக்கே பக்தி புரியும். பக்தி பேச்சிலும், செயலில் அதற்கு மாறாக இருக்கும் நீர் எப்படி அதை அறிவீர்? (கோபம் கொண்டதை நினைவூட்டுகிறார்)

சித்தாராமர்: ப்ரபு! எனது கோபம் தங்களுடைய ஆற்றலின் பங்கே. எனது பக்தி தாங்கள் தந்ததே! நான் யார்? (அல்லமராகிய நீரின்றி நான் வெற்று மனிதன்தானே எனும் பாவமுடன்)

அல்லமர்: மனதில் கோபமும் தாபமும் இருப்பதை சீடனானவன் எப்படி மறைத்து பேசலாம்? குஹேஸ்வரனை முழுவதுமாக நம்பினால்தான் இதிலிருந்து விடுபட முடியும். அவனிடம் விஸ்வாசமில்லையென்றால் அவன் கிளம்பி விடுவான் (போலியாக கிளம்ப யத்தனித்தார்)

சித்தாராமர்: நடுங்கியவாறே "ப்ரபு, என்னிடமிருந்து நீங்கள் தப்பி செல்லலாம். என் கண்களில் இருந்து மறையலாம். ஆனால் என் ஹிருதயத்தில் உங்களை அடைத்தேன் என்றால் நீங்கள் எங்கு

செல்வீர்கள்?

அல்லமர்: பெருஞ்சிரிப்புடன் "குஹேஸ்வரனை கைகளால் கட்ட முடியாது. மூச்சால் பிடிக்க முடியாது. நினைவுகளால் தொட முடியாது. கூரிய அறிவால் கூட அவனை அடக்க முடியாது. சித்தாராமா! நீ எப்படி அவனை பிடிக்க முடியும் என்கிறாய்?

சித்தாராமர்: ப்ரபு! உண்மைதான். ஏற்கனவே நீங்கள் என்னை சிறைப்பிடித்து உள்ளீர்கள் (அப்புறம் நான் எங்கு உங்களை பிடிப்பது?). தனது என்பதை விட்டு உங்களை முழுவதுமாக நம்புபவர்களே உங்களை அறிகிறார்கள். மல்லிநாதரே! என்னிடம் உம்மை பிடிப்பதற்கான எந்த ஆற்றலும் இல்லை. ஆகையால் அன்பால் என்னை ஏற்று கொள்ளுங்கள். என்னோடு வாருங்கள்.

அல்லமர்: குருவை அறியாத சீடன் பின்னால் எதற்கு வரவேண்டும்? எமக்கு இருக்குமிடமே கோவில். முட்டாள், நான் பிழை செய்தேன் பிழை செய்தேன் என்று அலறுவது மட்டும் குருவிற்கு பிடிக்காது. குருவிடம் கோபிக்கலாமா?

சித்தாராமர்: "ப்ரபு! பக்தர்களுக்கு சரணாகதன் என்ற தங்கள் குணத்தை விட்டு விட்டு ஏன் இப்படி பேசுகிறீர்கள்? கருணையால் உருவெடுத்து வந்துள்ளவரே! நான் தங்கள் அன்பை யாசிக்கிறேன். என்னை சோதிக்காதீர்கள். நான் சிறியவன். வார்த்தைகளால் உங்களை எப்படி வெல்ல முடியும்? நீங்கள் கைவிட்டால் இக,பர லோகங்களில் நான் இழிந்தவனாகி விடுவேன்" என்று சொல்லி கண்களில் நீர் பெருக்கி அல்லமரின் பாதங்களில் விழுந்தார்.

அல்லமரின் சோதனை அக்கணம் முடிந்தது. தாம் மறைத்து வைத்திருந்த அன்பை இப்பொழுது குரு கொட்டினார். "சித்தாராமா! உன் ஹிருதயத்தில் உண்மை நிலைத்து இருக்கிறது. எனது கோபம் பொய்யானது. நான் உன்னை விட்டு பிரியவே மாட்டேன்" என்றார். சித்தாராமருக்கு அப்பொழுது, அல்லமரின் வசனங்களை கேட்டும் அவரை பார்த்தும் மயிர்கூச்செறிந்தது. ஆனந்தம் அவருக்கு மனதிலும் உடலிலும் பொங்கியது. அல்லமப்ரபு எதற்காக அங்கு வந்தாரோ அது சித்தாராமருக்கு இன்னும் தெரியாமலிருந்தது. (தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/- ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: PH: +91-44-24895875

➢ Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83

➢ Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.

➢ Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.

➢ Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஜனவரி 5 | வைகுண்ட ஏகாதசி |
| ஏகாதசி | பிப்ரவரி 3, 18 ஜனவரி 19 |
| ஜனவரி 8 | கோவூர் |
| ஜனவரி 28 | வசந்த பஞ்சமி, மஹாரண்யம் கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.